Assignment of land to the landless.

*108 Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU S. RAMAKRISHNA THEVAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total extent of lands assigned by the Government to the landless in Ramanathapuram district from 1970 to November 1974, year-wise ;

(*b*) whether lands have been assigned to the family members even in cases where the head of the family owned lands ; if so, whether any action will be taken to resume the said lands ;

(*c*) whether lands have been assigned in other Districts or Taluks to the same person, or in the names of members of the family ;

(*d*) whether any action will be taken against those who have taken loans from the Government for the development of the said lands, but have not developed the lands; and

(*e*) of the lands so assigned the extent cultivated and the period for which the lands assigned should not be sold ?

நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் ஒப்படைப்பு

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஜில்லாவில் நிலம் இல்லாதவர்களுக்கு 1970 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய வருட வாரியாக மொத்தம் எவ்வளவு நிலங்கள் அரசால் ஒப்படை செய்யப்பட்டுள்ளது ?

(இ) குடும்பத்திலுள்ள தலைவர்களுக்கு நிலம் இருந்து அதே குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளதா ? ஆமெனில், திருப்பி எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(உ) ஒரே நபருக்கு மற்ற ஜில்லாக்களில் அல்லது தாலுக்காக்களில் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது அவர்கள் குடும்பத்தார் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

(எ) இந்நிலங்கள்மீது அரசு தரும் கடன்கள் வாங்கி, அபிவிருத்தி செய்யாமல் வைத்திருப்பவர்கள்மேல் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1975 மார்ச் 5

(ஐ) கொடுக்கப்பட்ட நிலங்களில் சாகுபடி செய்திருப்பது எத்தனை ஏக்கர்? கொடுத்த நிலங்களை எத்தனை ஆண்டுகள் வரை விற்கக் கூடாது?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: (அ)—

வருடம்.	விஸ்தீரணம். ஏக்கர்.	சென்ட்
1970	23,411	27
1971	24,214	39
1972	15,871	97
1973	6,137	61
1974	3,788	03
	73,423	27

(இ) 12 நபர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்பட்டு ஒப்படைப்பை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உ) இவ்வித இனங்கள் இல்லை.

(எ) ஒப்படைப்பு பெற்ற நிலங்கள் மூன்று ஆண்டுகளுக்குள் சாகுபடிக்குக் கொண்டுவராவிட்டாலும், அரசு கொடுக்கும் கடன் வாங்கி அந்நிலங்களை அபிவிருத்தி செய்யாமல் வைத்திருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஐ) 35,141.24 ஏக்கர் ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலங்களை ஒப்படைப்பு பெற்ற தேதியிலிருந்து 10 ஆண்டுகள் வரை விற்கக் கூடாது. அவ்விதம் விற்றால் அந்நிலத்தை அரசு திரும்ப எடுத்துக் கொள்ள உரிமை உண்டு.

THIRU G. VASANTHA PAI : Sir, how many persons were benefited by this assignment of land in quantity ?

(பிற்பகல் 4–10)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்; தலைவரவர்களே, 1947-ம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரையில் 20 ஆண்டு கால அளவில் 1·15 லட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2.88 இலட்சம் ஏக்கர்கள்

ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து அதாவது 1967-68 லிருந்து 30—11—1974 வரையில் 6.98 லட்சம் ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டு 3.57 லட்சம் மக்கள் பயன் அடைந்துள் ளனர்.

Tamil Nadu Cement to Uttar Pradesh.

* Q. 107. THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Central Government have recently issued any direction to the State that a portion of the Cement produced in Tamil Nadu should be exported to Uttar Pradesh ; and

(*b*) if so, the details thereof ?

உத்தர பிரதேசத்திற்கு தமிழ்நாடு சிமெண்ட்

திரு. எம். சங்கரலிங்கம் ; மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) மத்திய அரசு அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து உற்பத்தி யாகும் சிமெண்டின் ஒரு பகுதியை உத்தரப்பிரதேசத்திற்கு அனுப்ப வேண்டுமென்று தாக்கீது ஏதும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில் அதுபற்றிய விபரம் யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் (மாண்புமிகு தொழில் அமைச்சர் சார்பில்) (அ) and (இ) ; நம் நாட்டில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலை களில் உற்பத்தியாகும் சிமெண்டை எல்லா பிராந்தியங்களுக்கும் மத்திய அரசின் சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரி காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிருர். தமிழ்நாட்டில் ஒரு சில சிமெண்ட் தொழிற்சாலைகளின் உற்பத்தியில் ஒரு பகுதியை 1974ஆம் ஆண்டில் உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட வடக்குப் பிராந்தியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக இந்த அரசுக்கு எந்தவிதமான தாக்கீதும் அனுப்பப்படவில்லை.

திரு எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டில், மற்ற வருஷங்களை விட கூடுதலாக உத்தரப்பிரதேசத்திற்கு சிமெண்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, மொத்தம் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் என்னிடமில்லை. நம்முடைய சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து உத்தரப்பிரதேசத்திற்குச் தனிச்சலுகை போல, உடனடியாக சில அளவு சிமெண்ட் அனுப்ப வேண்டுமென்று ஆலைகளுக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது.